Y.M.C.A வாசிகசா

# சுயவிருப்பத்தில் இளைப்பாற்றுத் திட்டத்தால் யாழ்மாவட்டத்தில் பல இளம் அதிகாரிகள் ஓய்வு

சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறும் திட்டத்திற்கமைய யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல உத்தியோகஸ்தர்கள் தமது பதவிகளிலிருந்து ஓய்வு பெறவிருக்கிறார்கள். கடந்த வாரத்தில் இதற்கான விண்ணப்பத்தை சிலர் யாழ் செயலகத்தில் கையளித்துள்ளதாகச்செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நிர்வாக சேவையில் நல்ல அனுபவம் மிக்க பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த பல இளம் அதிகாரிகள் கூட இத்திட்டத்தைப் பயன் படுத்தி ஓய்வு பெறவிருக்கிறார்கள். ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரச ஊழியர்களுக்கும் இச் சுற்று நிருபம் பொருந்துமாகையால் யாழ் மாவட்டத்தில் இருந்து ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் இவ்வாண்டு டிசம்பர் 31-ந் திகதியுடன் ஓய்வு பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கியினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் நிமித்தமே அரசாங்கம் இந்த வகையில் ஆள் குறைப்பு திட்டத்தைக் கொண்டு வந்துள்ள — 04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 265 திங்கள் 05-11-1990 (ஐப்பசி 19) ந. ஆகிர் 16

# முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு எச்சரிக்கை

## முஸ்லிம்கள் விடயத்தில் தலையிடவேண்டாம் என்கிறார் அஷ்ரப்

முஸ்லிம் காங்கிரஸ் விடயங்களில் அரசோ அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவோ தேவையற்ற விதத்தில் தலையிடத் தேவையில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். ஏச். எம் அஷ்ரப் எச்சரித்துள்ளார்.

கடந்த வியாழன் பாதுகாப்பு இணையமமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன, முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கும், அரசுக்கும் பெரும் பிரச்சினைகளை உருவாக்குகின்றது என்று கூறியமைக்கே அஷ்ரப் இவ் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸிற்குத் தான் தமது வாக்குகளைத் தேர்தலில் அளித்தனர். அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவுக்கோ, அல்லது இந்த அரசிற்கோ அல்ல என அஷ்ரப் சுட்டிக்காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அஷ்ரப்பின் இந்த எச்சரிக்கை குறித்து அரச தரப்பில் இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

### வீர மரணம்

நேற்று மாங்குளம் ராணுவ முகாம் பகுதியில் ஏற்பட்ட மோதலில் 2-ம் லெப். மறவன் (சிங்கராஜ் சிறிகாந்தருபன்- முல்லைத்தீவு) வீரமரணமடைந்தார்.

செஞ்சிலுவைச்சங்கம்

## வலி- வடக்கில் சிக்கியவர்களை மீட்க எடுத்த முயற்சி தோல்வி

வலிகாமம் வடக்கில் இராணுவத்திடம் சிக்கியுள்ளவர்களை மீட்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கமும் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இராணுவம் நிலைகொண்டுள்ள ஊர்காவற்றுறைப்பகுதி மக்களுக்குநிவாரண உதவிகள் செய்ய இதேபோல எடுத்த நடவடிக்கைகளும் தோல்வியடைந்தன.

எனினும் இவர்கள் ஊர்காவற்றுறைக்கு மீண்டும் ஒரு தடவை செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (ப11)

## வட பகுதியில் உள்ள கிழக்குமாகாண ஊழியர்கள் தமது நிலைமை குறித்து ஜனாதிபதிக்கு மகஜர்

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வடபகுதி வந்துள்ள ஊழியர்கள் 'கிழக்கு மாகாண ஊழியர் சங்கம்' ஒன்றை அமைந்துள்ளனர்.

கிழக்கில் நடைபெறும்இனக் கொலைகளால் தமது உயிருக்கு உத்தரவாதம் இல்லாததால் மீண்டும் அங்கே திரும்ப முடியாதுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

தமது நிலைமைகள்குறித்து யாழ் அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கும் மகஜர் அனுப்பவுள்ளனர்.

நேற்று நல்லூர் சாதனா —04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் பல்கலைக்கழகம் இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகிறது.

இதனையடுத்து நேற்றுத் திருநெல்வேலிப் பகுதியில் பல புதிய மாணவர்களும், மாணவிகளும் இருப்பிடங்களைத் தேடி அலைந்ததைக் காண முடிந்தது.

பல்கலைக்கழக வளவிலும் பல மாணவர்கள் காணப்பட்டனர். (33,ப-11)

## வீரமரணமடைந்த போராளிகட்கு கோண்டாவிலில் அஞ்சலி

நேற்று முன்தினம் இரவு மாவிட்டபுரம் மினி முகாம் அழிப்பின் போது வீரமரணமடைந்த 6 வீர வேங்கைகளின் வீரஉடல்கள் நேற்று மாலை கோண்டாவில் மேற்குப் பிரதேசக் காரியாலயத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. ஆயிரக் கணக்கான பொது மக்கள் வீர அஞ்சலி செலுத் —04ஆம் பக்கம் பார்க்க

## மொனராகலைக் காட்டில் தொலைத்தொடர்பு சாதனம் மீட்பு

மொனராகலைக் காட்டுப் பகுதியில் இருந்து பெருமளவிலான தொலைத்தொடர்பு சாதனங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அடர்ந்த காட்டுப்பகுதியில் உள்ள குகை ஒன்றினுள் —04 ஆம் பக்கம் பார்க்க

## சிறு வள்ளங்களையும் கூட கடற்படை விரட்டுகின்றது

காரைநகர் கடற்படையினர்முன்னர்எப்போதுமில்லாதவாறு காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதிகளில் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது.

அண்மையில் அனலைதீவு சென்ற பயணிகள் படகை நடுக்கடலில் மறித்து சோதனையென்ற பெயரில் பயணிகளைக் கஷ்டப்படுத்தியுள்ளனர்.

இதனால் அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பிரயாணம் செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்படு —04 ஆம் பக்கம் பார்க்க

## நெடும்கேணிக் காட்டில் புலிகள் - ராணுவம் மோதல்

நேற்று முன் தினம் திருமலை மாவட்டத்தில் வில்கம் விகாரை, இறக்கண்டி, நிலாவெளி ஆகிய ராணுவ முகாம்களில் இருந்து வந்த ராணுவத்தினர் நெடும்கேணி காட்டில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது காட்டுப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் கோணேஷ் வீரமரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மோதல்கள் தொடர்ந்து அப்பகுதியில்நடைபெற்றுவருகின்றன. ராணுவத்தினருக்கு உதவியாக ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

## எருக்கலம்பிட்டியில்மோதல்

மன்னார் நகரப் பகுதியில் கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் முகாம் அமைத்திருந்த ராணுவத்தினர் நேற்று எருக்கலம்பிட்டிப் பகுதிக்கு வந்தபோது விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்குதல் நடாத்தினர்.

இதைத்தொடர்ந்து ராணுவத்தினர் எருக்கலம் பிட்டியில் இருந்து 5-ம் கட்டைப் பகுதியில் தங்கியுள்ளனர்.

இதே வேளை மன்னார் விடத்தல்தீவில் பொம்மர்கள் நடாத்திய தாக்குதலில் சிவாப்பிள்ளை தேவா (30) அல்லைப்பிட்டி என்பவர் பலி —04 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையில் மோதல் கரம்பன் நோக்கி ஷெல் தாக்கு

நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் ஊர்காவற்றுறையில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையே கடும் மோதல் இடம்பெற்றது. இம்மோதல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. சேதவிபரங்கள் தெரியவில்லை.

இதனைத்தொடர்ந்து பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இவை நாரந்தனை கரம்பொன் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (48)

# வீமன்காமம் மினி முகாம் மீது நேற்று முன்தினம் தாக்குதல்

மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவம் மீது நேற்று முன்தினம் இரவு 8 40 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் அதிரடித்தாக்குதல் நடத்தப்பட்டது.

கனரக வாகனங்கள் சகிதம் நாற்திசையிலும் இருந்துதாக்குதல் நடாத்தக் கூடிய முறையில் பலமாக அமைக்கப்பட்ட நிலையின் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் 15க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்த நவீனரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலை அடுத்து நிலைகுலைந்த இராணுவத்தினர் பலநிலைகளிலிருந்து பின்வாங்கிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றைய தாக்குதலில் 12 விடுதலைப்புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

விடுதலைப்புலிகளினால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்: ஏ கே. எல் எம் ஜி- 02, ரீ-56 02-06, ரீ 56-01-02, ரீ-81-02-02, றம் மகசீன் —04 ஆம் பக்கம் பார்க்க

# ரஞ்சனுடன் ஒரு கற்பனைப் பேட்டி

— பதுமலாஞ்சனன்

கே:- புலிகள் நாளையே பேச்சுவார்த்தைக்கு இசைந்தாலும், அவர்களுடன் பேசி அவர்களின் உரிமைகளைக் கொடுத்து விட ஆயத்தமாயுள்ளோம் எனப் பிரதமர் பாரிஸில் பேசியிருக்கிறார். தமிழருக்கு எவ்வித உரிமைகளைக் கொடுக்க உத்தேசம்?

ப:- வட, கிழக்கில் அவர்கள் இருக்கலாம். இலங்கையின் வேறு பகுதிகளுக்கு வந்தால் கேள்வி முறை ஏதுமின்றிக் கைது செய்யப்படுவர். (லஞ்சம் கொடுக்கிற சிலரை விடுதலை செய்வது விதி விலக்கு) இந்தியாவுக்கு அகதியாகத் தப்பி ஓடினால் பாக்கு நீரிணையில் மூழ்கடிப்போம். வேறு நாடுகளுக்குப் போக விசா வழங்கோம். அவர்கள் நிற்கும் இடமெல்லாம் நெருஞ்சி முள் தைக்க வேண்டும்.

கே:- நன்றி. இவை நீங்கள் கொடுக்கக் கூடிய அதிக பட்ச உரிமைகள். நாங்கள் நோபல் பரிசுக்கு ஈடான பரிசொன்றைப் புதிய துறை ஒன்றுக்கு வழங்க நினைக்கிறோம். ஹிட்லர் பெயரும் உங்கள் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப:- புதியதுறை எதுவென்று புரிகிறது. நிச்சயமாய் அப்பரிசு எனக்கு வழங்கப்பட வேண்டும். ஹிட்லர் தனது உட்சுவரை இடித்து விழுத்தவில்லை நான் சிங்கள இளைஞர்களிலேயே ஒரு இலட்சம் பேரைக் காணாமல் போகச் செய்துள்ளேன்.

கே:- ஹிட்லரின் 'gas chamber' க்கு ஈடாக உங்கள் செயற்பாடுகளில் எதைக் குறிப்பிடலாம்?

ப:- ஏன்? அகதி முகாம்களில் இருந்து பத்து இருபது என்று அழைத்துச் சென்று கொலை செய்து விடுவது பற்றி நீங்கள் கேள்விப்பட வில்லையா? மனிதர்களை உயிரோடு ரயர் போட்டு எரித்து விடுவது பற்றி நீங்கள் அறியாதிருப்பது ஆச்சரியம். நிகழ்காலம் சரித்திரத்தை விடச் சுவையானது.

கே:- ஹிட்லர் 'யூத இனத்தை mass sterilization செய்தான். நீங்கள்?

ப:- மண்டைதீவில் இளைஞர்களுக்குக் குளிசை வழங்கிய நிகழ்வை நீங்கள் எப்படிக் குறைத்து மதிப்பிடலாம்?

கே:- ஹிட்லரின் ஆணைக்குப் பயந்த டாக்டர்கள் யூதர்களின் முள்ளந்தண்டுகளில் ஊசி ஏற்றி (spinal in jection, அவர்களைச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தினார்கள்.

ப:- நகக் கண்ணில் ஊசி ஏற்றுவது என்ன குறைவா?

கே:- 'முதலியும்' ஏறத்தாழ உங்களைப் போலவே யுத்தம் நடத்தினார். அவரை விட நீங்கள் எவ்வகைகளில் சிறப்பாகத் தொழிற்படுகிறீர்கள்?

ப:- விஷயம் தெரியாதவரையா நீர்! சகடை விமானத்தைப் பாவித்து ஒரே நேரத்தில் பத்துப் பதினைந்து அப்பாவி மக்களின் வீடுகளை நொருக்கித் தள்ள அவரால் முடியவில்லை. யாழ்ப்பாண நகரைத் தரை மட்டமாக்க அவரால் இயலவில்லை. அவரது ஆட்சியில் படை வீரர்கள் கிழவன், கிழவிகளை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்கள். நான் கிழவன் மாரின் கைகளைப் பின்னால் கட்டி கிணற்றில் தள்ளச் சொல்லியிருக்கிறேன். பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை அவர் ஒன்றும் செய்யவில்லை. நான் எட்டு ஒன்பது வயதுச் சிறுவர்களையே காணாமல் போகச் செய்துள்ளேன். இவ்வளவோடு முடிந்ததா? பாருங்களேன் திருவிழாவை! 'மிக்' விமானங்கள் வரப்போகின்றன.

கே:- அதற்கான செலவு பற்றி?

ப:- நிதி அமைச்சர் கவலைப்படட்டும் எனக்கென்ன?

கே:- குடா நாட்டு மக்களை முற்றாக வெளியேற்றி விட்டுப் புலிகளுடன் யுத்தம் செய்யும் யோசனையை ஏன் கைவிட்டீர்கள்?

ப:- அப்படிச் செய்தால் புலிகளோடு மட்டும் யுத்தம் புரிய வேண்டி வரும். அது கடினம். பொது மக்களோடு யுத்தம் புரிந்து வெற்றி பெறுவது சுலபம்.

கே:- ஆலயங்கள் மீது குண்டு பொழிவதன் நோக்கம் என்ன?

ப:- இறைவனை வழிபட்டால் மனோபலம் அதிகரித்து விடும். அவர்களைக் கோயிலுக்குப் போகாமல் தடுத்து விட்டால், உளவியல் ரீதியாகப் பலவீனப் பட்டு விடுவார்கள்.

கே:- பாடசாலைகள் மீது?

ப:- இது எல்லாருக்கும் தெரிந்த பதில். ஒரு சமுதாயத்தை அடிமைப்படுத்த இலகுவான வழி - அதன் கல்வி நிலையை மட்டப் படுத்துவது.

கே:- அசோகனுக்குக் கலிங்கப் போரில் ஞானோதயம் உருவாயிற்று உங்களுக்கு எப்போது உருவாகும்?

ப:- நான் எனது மனச் சாட்சியையே சித்திரவதை செய்து கொலை செய்து விட்டேன். ஆகவே இக்கேள்வி பொருத்தமற்றது.

கே:- மிகச் சந்தோஷம் அமைச்சரே. இறுதியாக ஒரு கேள்வி. நீங்கள் புத்தர் பிரானின் போதனைகளைப் பின்பற்றி நடப்பவர் என்று சொல்வதில் பெருமைப்படுவீர்களா? வெட்கப்படுவீர்களா?

ப:- இதற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

நன்றி, மந்திரியாரே வருகிறேன்.

# அடைமழையால் அனர்த்தம்; நெற்செய்கை பாதிப்பு!

தற்போது பெய்துவரும் அடைமழையால் குடாநாட்டின் பல பாகங்களிலும் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் விவசாயிகள் பெரிதும் துயர்கொண்டுள்ளதாகவும் பரவலாகக் கிடைத்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பூநகரியில்

பூநகரிப் பகுதியில்இம்முறை காலபோக நெற்செய்கை மழை காரணமாக பெருமளவு பாதிப்படைந்துள்ளது.

மழை தொடர்ச்சியாகப் பெய்வதற்கு முன்னர் புழுதி விதைப்பாக விதைத்த ஒரு சிலரது நெற்பயிரே ஓரளவுக்கு வளர்ந்து வயலில் தண்ணீருக்கு மேல் நிற்பதாகவும் மழை பெய்யத் தொடங்கிய பின் விதைத்த பலரது வயல்களில் நெல் முளைக்க முடியாமல் தண்ணீர் மூடி நிற்பதாகவும் பலரை விதைக்கவே விடாமல் மழைத் தண்ணீர் வயலை மூடி நிற்பதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் யூரியா உரத்திற்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதனால் இம்முறை நெற்செய்கை பெருமளவு பாதிப்படையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வலி - மேற்கில்

அடைமழை காரணமாக வலி-மேற்கில் நெற்செய்கை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவாரமாக தொடர்ந்து கொட்டும் அடைமழையினால் நெற்பயிர்கள் மறைந்து, வயல்கள் வெள்ளக் காடாககாட்சி அளிக்கின்றன.

சில இடங்களில் நெற்பயிரின் உயரத்திற்கு மேலாக 10, 12 அங்குலத்திற்கு மழைநீர் உயர்ந்துள்ளது.

## வடமராட்சியில்

வடமராட்சிப் பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் இவ்வாண்டு பெரும்போக நெற்செய்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாரம் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் பல வயல்கள் இன்னமும் விதைக்க முடியாது வெள்ளம் பெருகி வடிகின்றது.

விதைத்த வயல்கள் பலவும் அதிகமாகப் பெய்த மழையால் மூடப்பட்டுள்ளன. பல வயல்களில் நெற்கள் குருத்துக்கக்கிக் காணப்படுகின்றன. இந்நிகழ்வுகளால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இவ்வாண்டு இப்பிரதேசத்தில் நெல் விளைச்சல் குறைவாகவே இருக்குமெனக் கூறப்படுகிறது.(32-13-43-44

## இன்று சமூகம் தர கோரிக்கை

யாழ் மாவட்டப் புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் அனைவரையும் இன்று முற்பகல் 9 00 மணிக்கு அதன் கோண்டாவில் தலைமைக் காரியாலயத்திற்குச் சமூகமளிக்குமாறு யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாக செயலகக் கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக் கொள்ளுகின்றார்கள்.

## இவர்கள் கவனத்துக்கு....

வலி வடக்குப் பகுதியில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் ஆனி மாதத்திற்கான பணத்தை இது வரை பெறாதிருப்போர் சம்பந்தப்பட்ட தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடி, ஆவணி மாதக் கொடுப்பனவுகள் பற்றி உத்தரவு கிடைத்ததும் அறிவிக்கப்படும் எனவும் வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு இராசையா தெரிவித்தார்.

(ப-2)

## அகதிகளுக்கு உதவி

கரவெட்டி வட்டவை எல்லைக்குட்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு கரவெட்டி வட்டவையினர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றனர். இதனால் இம்முகாம்களில் தங்கியுள்ள ஆயிரக் கணக்கான மக்கள் நன்மை அடைகின்றனர். (44)

## ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்திய சபலைகளுக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் மருந்து வகைகளை யாழ் சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் வழங்கி வருகின்றனர்.

ஏற்கனவே லகயிருப்பில் உள்ள மருந்து வகைகளும், செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட மருந்து வகைகளுமே இவ்வாறு மருந்துத் தட்டுப்பாடு நிலவும் அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மற்றும் அரசினர் மத்திய மருந்துச்சாலைகளுக்கும் தற்போது வழங்மப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை (இது தற்போது சங்கானை வைத்திய சாலையில் இயங்கிவநகிறது', நயினாதீவு அரசினர் வைத்தியசாலை, மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றுக்கு மருந்து வகைகள் வழங்கப்பட்டன. (17)

## புதிய பணிமனை

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனை நல்லூருக்கு தற்காலிகமாக மாற்றப்படவுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் இலங்கை விமானப்படை மேற்கொண்ட தாக்குதலால் தலைமைப் பணிமனை பலத்த சேதமடைந்துள்ளதெனவும், திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்வரை, தலைமையலுவலகம் நல்லூருக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

## சிறு விளம்பரம்


சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை) 11022


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி நாகேஸ்வரி விஜயசிங்கம்

தோற்றம்: 15-6-1940 மறைவு: 15-11-1989

குன்றிலிட்ட தீபமென குலவிளக்கானாய்!
வளமான வாழ்விற்கு வழிசமைத்தாய்!
அடல் வல்லான் அடிக்கமலம் சேர்ந்தனையோ!
ஆண்டுபல கடந்தாலும் அணையாதம்மா
உன் நினைவு!

166/ 31, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர். (கலா குளிர்பானத் தயாரிப்பாளர்)
11033

## முரசொலிக்கு வந்த கடிதம்

# உயிர் காப்பான் தோழன் என்பர்; இந்த ஜென்மமோ...

ஆசிரியர்,
முரசொலி.

ஹற்றனைச் சேர்ந்த இந்திய வம்சாவளித் தமிழ் மகன் ஒருவர் யாழ்ப்பாணத்தைப் பார்வையிட விரும்பி நண்பர் ஒருவருடன் யாழ் வந்தபோது அந்தநண்பரிடமே கருக்கு மட்டையினால் அடிவாங்கியதுடன் பல துன்பங்களையும் அனுவித்து தனது ஊருக்குச் செல்கின்றார். ஹற்றன் டிககோயா தரவல தோட்டத்தைச் சேர்ந்த சந்தனம் அந்தோணிதாஸ் வயது 35 என்பவரே இந்த அனுபவித்தினை பெற்றுள்ளார்.

இவர் தனது ஊரில் உள்ள பாண் நிலையம் ஒன்றில் தொழில் பார்த்ததாகவும் சென்ற 12 6-90 அன்று யாழ்ப்பாணத்தைப் பார்வையிட விரும்பி வியாபாரத்தில் ஈடுபடும் இளைஞர் ஒருவருடன் யாழ்ப்பாணம் வந்ததாகவும் யாழ் வந்தவுடனேயே தனக்குச் சோதனை ஏற்பட்டதுபோல் பிரச்சினைகள் ஆரம்பித்ததாகவும் இதனால் தனது ஊருக்குச் செல்ல முடியாது அவதியுற்றதாகவும் தெரிவித்தார் வலிகாமம் மேற்குப்பகுதி கிராமம் ஒன்றை சேர்ந்த அந்த நண்பர் வீட்டிலேயே தங்கவேண்டியிருந்ததினால் அங்கு தங்கியதாகவும் முதலில்ஒருசில நாட்களுக்கு தனக்கு நல்ல முறையில் உணவு கிடைத்ததாகவும் பின்னர் நாட்கள செல்லச் செல்ல தன்னைக்கொண்டு வீட்டு வேலைகளை செய்ததாகவும் தான் மறுக்காது அவைகளைச் செய்து முடித்ததாகவும் கூறினார். சில நாடகளின் பின் வளவினில் இருந்த தூர்ந்துபோன கிணற்றினைத் தோண்டும்படி கூறி தன்னைக் கஷ்டப்படுத்தியதுடன் நாட்கள் செல்லச் செல்ல சில வேளைகளில் ஒரு வேளை மட்டும் உணவு கிடைத்ததாகவும், பின்னர் தனது ஊருக்குப் போவதற்கு முயற்சி மேற்கொண்டபோது அந்த நண்பர் ஊருக்கு நீ போக முடியாது, என்னுடனேயே இருக்க வேண்டும் என்று கூறி வற்புறுத்தியதாகவும் நீ ஊருக்குப் போக எத்தனித்தால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டியதாகவும் கூறினார். ஊதியம் இல்லாமல் வேலை வாங்கியதால் முரண்பட்டதாகவும் வடக்கத்தையான் வடக்கத்தையான் என்று நண்பர் திட்டுவாராம் ஒரு பெரிய பனம் கருக்கு மட்டையினால் அடித்தார் என்றும் இதனால் வலதுபக்கத் தோளில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். (தோளில் தழும்பு) காணப்பட்டது.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதேசக் காரியாலயத்தில் முறையிட்டபோது உரியவரை அழைத்து விசாரணை செய்யப்பட்டதாகவும், அந்நபருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு தன்னை ஊருக்கு அனுப்பிவைக்கும் பொறுப்பினையும், சிறந்தமுறையில் பராமரிககும் பொறுப்பினையும் அவர்மீது சுமத்தியதாகவும் விரக்தி நிலையில் இருந்த தனக்கு நீதி கிடைத்தினையிட்டு மகிழ்ச்சி கொண்டதாகவும் கூறினார்.

தனது தாய் தந்தையினர் தனக்கு துக்கம் கொண்டாடியதனை அங்கிருந்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நண்பர் மூலம் அறிந்ததினால் கொழும்பு செல்லும் காரைநகர் இளைஞர்களுடன் தான் ஹற்றன் செல்வதற்கு இங்கு (பூநகரி) வந்து நிற்பதாகவும் தெரிவித்தார். இச் சம்பவத்தினால் எமது மக்களை தவறாக எடைபோட்டீர்களா என்று வினவிய போது ஒருவர் தவறு புரிந்தமைக்காக தான் எல்லோரையும் தவறாக நினைக்கவில்லை என்றும் தனக்கு உதவி புரிந்த ஏனைய தமிழ் சகோதரர்களை தன்னால் மறக்க முடியாது என்றும் இவரு நடக்கும் அரசின் அநீதிகளை மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கும் எடுத்துக் கூறுவதாகவும் கூறினார்.

பூநகரி. ந. கிருஷ்ணபவன்

# ஆங்கில ஆசிரியர் கருத்தரங்கு இன்று முதல் நடைபெறும்

யாழ்மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 11 வரையுள்ள வகுப்புக்களில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று யாழ் கல்வித் திணைக்கள ஆங்கில கல்வி அதிகாரி திபாக ராசாவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு பின்வரும் ஒழுங்கில் நான்கு கோட்டக் கல்வி ரீதியாகவும் காலை 9 00 மணி முதல் நடைபெறும்.

★ யாழ் கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், நல்லூர், ஆங்கில ஆசிரியர்களுக்கு இன்று திங்கட்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும்;

★ மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த கோப்பாய் ஆங்கில ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதம் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் மானிப்பாய் ஆங்கில ஆசிரியர்களுக்கு நவம்பர் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும்;

★ சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்திலும்;

★ பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதம் 15ஆம் திகதி வியாழக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

இக்கருத்தரங்குகளில் சகல ஆங்கில ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு ஆங்கிலக் கல்வி அதிகாரியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (12)

தொடர் — 05

# 'முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்'

— 'அரவிந்தன்'

## இழப்புக்கள்

''கொத்தளப் பகுதியில் நிற்பவர்களுக்கு உதவவென சென்ற கண்ணாடி, ஜொனி, புரட்சிமாறன், நெல்சன், அனீபா, ஜேம்ஸ், வேசிட்டன், சந்துரு, பீலிப்ஸ், நிசாந்தன் ஆகியோரும் மதிலடிவாரத்திலேயே வீழ்கின்றனர்.

கொத்தளத்தின் மேற்பகுதியில் நடந்த சண்டையிலேயே லோசனும், அனிபாவும் இறக்கின்றார்கள் எம்மால் கைப்பற்றப்பட்ட கொத்தளப்பகுதியை பலப்படுத்தி அங்கிருந்து முன்னேறுவதற்குத் தேவையான ஆட்பலம் மேலே இருக்கவில்லை. அடிவாரத்தில் நீண்ட நேரம் நடந்த சண்டையில் குழுத் தலைவர்கள் உட்படப் பலர் காயமடைந்து விட்டனர். சிலர் இறந்து விட்டனர். எனவே கைப்பற்றப்பட்ட கொத்தளத்தை ஸ்திரப் படுத்தமுடியவில்லை.

## வாசலைக் கைப்பற்ற மகளிர் படை அணி

''கோட்டையின் பிரதான வாசல் பகுதியை ஆண்போராளிகளும், பெண்போராளிகளும் சேர்ந்து ஒரு உச்சத் தாக்குதலைத் தொடுத்து கைப்பற்றுவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஆனால், கோட்டை வாசலைக் கைப்பற்றும் பொறுப்பை மகளிர்படை அணியிடமே தரவேண்டும் என பெண்கள் தரப்பினர் வற்புறுத்திக் கேட்டனர்.

''அவர்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டு வாசல் புறத்தை நேரடியாகச் சென்று கைப்பற்றும் பொறுப்பு பெண் புலிகளின் அணியிடம் வழங்கப்பட்டிருந்தது. அதே சமயம் வாசலுடன் இருந்த தென்பகுதிக் கொத்தளத்தை கைப்பற்ற ஆண்கள் அணி சென்றது. இந்தக் கொத்தளமும், வாசல் புறமும் பொலிஸ்நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணிலிருந்து சுமார் 40 யார் தூரத்திலேயே இருக்கின்றன. நாம் கோட்டை வாசலைக் கைப்பற்ற முயல்வோம். என்பது எதிரிக்கு நன்கு தெரியும். எனவே கோட்டை வாசலை மிகவும் பலப்படுத்தி இருந்தான் தாக்குதலின் போது எமக்குப்பெரிதும் முட்டுக்கட்டையாக இருந்த விமானங்களும் கோட்டை வாசல் பகுதியை அண்டிய இடங்களையே தமது பிரதான இலக்காகக் கொண்டிருந்தன. கோட்டை வாசல் பகுதியிலிருந்தும், அதை அண்டிய கொத்தளம் மற்றும் மதில் மேலிருந்தும் சரமாரியான கைக்குண்டுத் தாக்குதல்களை எதிரி நடாத்திக்கொண்டிருந்தான்

''கோட்டை வாசலை நோக்கிய பாதையானது தண்ணீர் ஓடும் ஒரு வாய்க்காலைப் போன்றது. வாய்க்காலின் புருவப் பகுதியைக் காப்பரணாகக் கொண்டு வாசலில் உள்ள எதிரி நிலைகளைக் கைப்பற்ற சங்கீதாவின் தலைமையிலான் பெண்கள் அணி சாதுரியமாகவும், துணிச்சலுடனும் முன்னேறியது எதிரி நிலையிலிருந்து 5 - 6 யாருக்குச் சென்று விட்டார்கள். (அங்கிருந்தபடி சரமாரியான தாக்குதலைத் தொடுத்துக் கொண்டு எதிரியின் அரணுக்குள்ளே பாய்ந்து சென்று கையெறிகுண்டை உள்ளே வீசி அரணுக்குள்ளேயே எதிரிக்குச் சமாதி கட்ட முனைந்தார்கள்). பெண்கள் அணிக்குதவியாக மறுபுறத்தில் ஆண்கள் அணியானது கோட்டை வாசலின் அருகிலும். மேலேயும் இருந்த எதிரியின் அரண்களைத் தாக்கி அவர்களைத் திசைதிருப்பிக் கொண்டிருந்தார்கள்.

## வீழ்ந்த பெண்புலிகள்

''காற்றையே காப்பரணாக்கி கோட்டை வாசலைக்கைப்பற்றமுனைந்த லெப். சங்கீதா, மாதங்கி, அநுரா, மாதுரி, ஆகியோர் கோட்டை வாசலிலேயே தீரத்துடன் வீழ்ந்து போனார்கள்.

''அதேசமயம் வாசலுக்கு அருகிலிருந்த கொத்தளத்தைக் கைப்பற்றச் சென்ற ஆண் போராளிகளில் பலர் காயமடைந்தும், சிலர் இறந்தும் விட்டனர்.

## தெற்குக் கொத்தளத்தை நோக்கி புல்டோசர்

இந்தச் சந்தர்ப்பத்தில் டாங்கி போன்று வடிவமைக்கப்பட்ட புல்டோசர் ஒன்று பொலிஸ் நிலையப் பின் பகுதியிலிருந்து கடற்கரை வீதி வழியாக தென் பகுதிக் கொத்தளத்தை நோக்கிச் செல்லத்துவங்கியது.

''விமானத்திலிருந்து வீசப்பட்ட வெளிச்சக்குண்டுகளும், மற்றும் விமானத்திலேயே பூட்டப்பட்டுக் கிடந்த சக்தி வாய்ந்த மின் விளக்குகளின்தும் ஒளியில் புல்டோசரின் நகர்வை எதிரி கண்டு விட்டான். விமானத்திலிருந்து ஏவப்பட்ட குண்டொன்று புல்டோசரின் முன் பகுதியைத் தாக்கியது. கவசமயப்படுத்தப்பட்டிருந்தபடியால் வாகனம் உடைந்து சிதறவில்லை ஆனால், சாதாரண தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்ட அதிர்வின் காரணமாக புல்டோசரின் சாரதி மயக்கமடைந்து விட்டார்.

''டோசருக்குள்ளே இருந்த சக தோழர்கள் தண்ணீரைத் தெளித்து சாரதியின் மயக்க நிலையைப் போக்கினர். மீண்டும் டோசர் கொத்தளப் பகுதியை நோக்கி தாக்குதலை நடாத்திக் கொண்டு முன்னேறியது. இந்தத் தென்புறக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்ற முனைந்த அணிகள் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தபடி தீரமுடன், உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். தன்னந்தனியாக ஒரு தோழன் கொத்தளப் பகுதியில் ஏறி அங்கிருந்தபடி எதிரி மீது கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தினான். இருந்தும் இந்த முனையில் 13 தோழர்களது இழப்பும் மேலும் பலர் காயமடைந்தும் இருந்தபடியால் கொத்தளத்தில் ஏறித் தாக்குதலை நடாத்துவது இயலாமல் போய் விட்டது.

''இக்கொத்தளப் பகுதியைக் கைப்பற்றும் அணிக்கு பொறுப்பாக இருந்த குழுத் தலைவன் வைத்திருந்த துப்பாக்கி குண்டுபட்டு இயங்காது நின்று விடுகின்றது. புதிய துப்பாக்கி ஒன்றைப் பெறுவதற்காகப் பின்னால் இருந்த பொலிஸ் நிலையக் காவல் அரணுக்குச் சென்று புதிய துப்பாக்கி ஒன்றைப் பெற்று வந்து மீண்டும் கொத்தளப் பகுதியில் நின்று போராடினான்.

''தென்பகுதிக் கொத்தளத்துடன் இருந்த கோட்டை வாசலை இருபுறத்திலும் நெருங்கி அதைக் கைப்பற்றும் முயற்சியில் பெண்புலிகள் சங்கீதா, மாதங்கி, மாதுரி, அனுரா மற்றும் கருணாநிதி, சரத்பாபு, விக்ரம், கெனடி, நிசாந்தன், அலீப், சபேசன், மோகன், எட்றிச் ஆகிய பதின்மூவர் வீரமரணமடைந்தனர்.

## வடமேற்குப் பகுதியில் போர்

''இதே சமயம் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியிலிருந்து வட-மேற்கு கொத்தளப் பகுதியை கைப்பற்ற முனைகையில் யசோவும் இந்த முனையில் காயமடைந்த வீரர்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த பில்லாவும் வீரமரணத்தைத் தழுவுகின்றனர்.

''காயமடைந்து மயக்க நிலையில் உயிருடன் இருந்த பெண் போராளி ஒருவர் காலையில் மயக்கம் நீங்கியும் வெளியேற முடியாத நிலையில் அடுத்த நாள் இரவு-ஏறக்குறைய 15 மணிநேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார். இந்த முயற்சியில் 27 தோழர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்துக் கோட்டையைக் கைப்பற்ற முனைந்தனர்'' - என விடுதலைப் புலிகள் அதிகார பூர்வ ஏடு விபரிக்கின்றது.

## கோட்டையைத் தகர்க்க அரசின் திட்டம்

யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை ஸ்ரீலங்கா அரசிற்கும் பெருந்தலையிடியாக அமைந்தது கோட்டையை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கே யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் இருக்கும் என்பது போன்ற தன்மானக் கருத்துக்களையும் அரசு சார்பில் அவர்கள் கூறிக் கொண்டனர். எனவே கோட்டை விடயம் ஒரு கௌரவப் பிரச்சினையாக மாறியது. கோட்டைக்குள் அகப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படையினரைப் போஷிப்பதும், அதற்காக நாளாந்தம் யாழ்ப்பாணப் பகுதியில் விமானக் குண்டுவீச்சைத் தொடர்ச்சியாகச் செய்வதும் பெருஞ்செலவினைத் தரும் நடவடிக்கையாக இருந்தது எல்லாவற்றுக்கும் மேலாகக் கோட்டைக்குள் அகப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் ஒரு கட்டத்தில் தம் இயலாமை காரணமாக புலிகளிடம் சரணடைந்து விடுவார்களோ என்ற அச்சமும் தலை தூக்கியதால் ஸ்ரீலங்கா அரசு கோட்டை முற்றுகையைத் தகர்ப்பதற்குப் பெருந் திட்டமொன்றினை உருவாக்கியது

அதுவே ''ஒப்பறேசன் போர்ட்'' (Operation Fort) ஆகும்.

(வளரும்)

### ஜனசக்தி, பாடசாலை மாணவர்களின்

# உணவு முத்திரைகள் விரைவில்

# யாழ் செயலகம் வந்து சேரும்

ஜனசக்தி முத்திரைகளையும், பாடசாலைப் பிள்ளைகளுக்கான மதிய உணவுக்குரிய முத்திரைகளையும் யாழ்நகர் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில்யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த 3-வது வட்ட ஜனசக்தி உணவு முத்திரை 1990 ஆடி மாதத்துடன் முடிவடைந்த போதும், ஆவணி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்த வேண்டிய 4-வது வட்ட முத்திரைகளைக் கொழும்புக்குச் சென்று எடுத்து வருவதின் தாமதம் காரணமாகவே உரிய காலத்தில் இவற்றைப் பெற்றுப்பாவனையாளர்களுக்கு வழங்க முடியாமற் போயிற்று.

ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவுகளிலுமிருந்து பெற்றுக் கொண்ட அறிக்கைகளின்படி யாழ் மாவட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான மதிய உணவினைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு லட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் உரித்துடையவர்களாய் இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு வழங்குவதற்காக இரண்டு லட்சத்து 50 ஆயிரம் முத்திரைகளை மேற்படி அதிகாரிகளிடம் கையளிக்கும்படி வறுமை நிவாரண ஆணையாளரை யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இவ்வார இறுதிக்குள் அல்லது அடுத்த வார ஆரம்பத்துக்குள் இம்முத்திரைகள் அனைத்தும் யாழ் அரச செயலகத்தை வந்து சேர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (47)

## கொழும்பு பிரதம தபாலகம் மக்களை ஏமாற்றுகிறது

கொழும்பிலிருந்து சென்ற வாரம் லங்காசிறி கப்பலில் யாழ் குடா நாட்டுக்கு வந்த தபால் பொதிகளில் மக்கள் எதிர்பார்த்தபடி முத்திரைகள், பதிவுத் தபால்கள், வெளி நாட்டுத் தபால்கள் எவையும் வரவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வந்த தபால் பொதிகளில் உள்ளூர், வெளியூர் சாதாரண தபால்கள் மட்டுமே வந்துள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரணப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பரீட்சை முடிவுகளும் இதில் வரவில்லை.

இதனால் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தபால் பொதிகள் வரும் காலங்களில் தபாலகங்களை முற்றுகையிட்டு ஏமாந்து செல்கின்றனர். (33)

## அளவெட்டியில் கசிப்பு வேட்டை

அளவெட்டி கணேஸ்வரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 5 பெரல்கள் கசிப்பு கைப்பற்றப்பட்டன.

வேலி, கூரை, பதுங்குகுழி என்பவற்றில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்த போதே கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக நான்கு கசிப்பு விற்பனையாளர்களை தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுப் பணியாளர்களும், உத்யோகத்தர்களும் மடக்கிப் பிடித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (48)

## மேஜர் கணேஷ் நினைவாக

வீரமரணமடைந்த மூதூர் பிரதேசப் பொறுப்பாளர் மேஜர் கணேஷின் நான்காம் ஆண்டு நினைவாக திருநெல்வேலி சிவன் கோவில் வீதிக்கு மேஜர் கணேஷ் வீதி எனப் பெயரிடப்படவுள்ளது.

## நகரில் மாட்டிறைச்சி விற்பனை சுகாதாரமற்ற இடங்களில்

யாழ் நகரில் தற்போது சுகாதாரமற்ற இடங்களில் மாட்டிறைச்சிக் கடைகள் திறக்கப்பட்டபோதிலும் தனியிறைச்சி கிலோ 50 ரூபா என அறிவிக்கப்பட்டும் முள்ளுடன் 50 ரூபா அறவிடப்படுவதாகப் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தரமற்ற இறைச்சி விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் முதல் நாள் விற்கப்படாதது மறு நாள் விற்கப்படுகிறது.

## எழுச்சி யாத்திரை

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் நடாத்திவரும் எழுச்சி யாத்திரை நேற்று மல்லாகத்திலிருந்து ஆரம்பமாகி அளவெட்டியூடாகச் சென்று மீண்டும் மல்லாகம் சேர்ந்தது. (48)

## அதிகாலை ஹெலித் தாக்கு

நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் சுண்டிக்குளம் பகுதியில் ஹெலித் தாக்குதல் நடைபெற்றது. இத் தாக்குதலில் எவரும் காயமடையவில்லை. (71)

### சுயவிருப்பத்தில்...

தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச சேவையில் இருந்து இவ்வாறு ஆட்களைக் குறைத்த பின்னர்பலதிணைக்களங்களை ஒன்றாக இணைப்பதோடு, சிலதிணைக்கள வேலைகளை அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளைக் கொண்டு கொம்பியூட்டர் மூலமாகச் செய்யவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (66)

### வீமன்காமம்...

-09, றவைகள் - 3849, ரைபிள் கிரனைட் - 07 கோல்சர் - 01, லிங் - 750, மகசின் - 03.

2-ம் லெப். ரோம்(பதுளை) 2-ம் லெப் அன்றூ (புன்னாலைக் கட்டுவன் தெற்கு), டில்வி (முல்லைத்தீவு),ராஜன் (மட்டக்களப்பு), லெப். மரிக்கார் (நெடுங்கேணி), பாஞ்சாலன் (கரணவாய்), ஈசன் (நாவலடி), கார்த்திக் (கொக்குவில் மேற்கு), மேஜர் சஞ்சிகா (கரவெட்டி), கப்டன் அருந்ததி (அரியாலை), லெப் காஞ்சனா (வல்வெட்டித்துறை), சேகர் (இணுவில்) ஆகிய விடுதலைப்புலிகள் வீரமரணம் அடைந்தனர். (70, 74, 48)

### வீரமரணம்...

தினார்கள்.

அவர்களின் பூதவுடல்கள் கோப்பாயிலுள்ள மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லும்வேளை கோண்டாவில் கிழக்கில் வீதியெங்கும் குத்துவிளக்குகள், மெழுகுதிரிகள் ஏற்றி பூ சொரிந்து அஞ்சலி செலுத்தினார்கள். (ப 10)

### சிறு...

இறது.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழிலுக்குச் செல்லத் தயக்கம் காட்டி வருவதாகவும் அறியமுடிகிறது.

சிறு மீன்பிடி வள்ளங்களைத் தொலைவில் கண்டாற் கூட கடற்படையினர் கலைத்துப் பிடித்து மீன்களையும் பறிமுதல் செய்கின்றனராம். (ப 1)

### வடபகுதி...

பாடசாலையில் இச்சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது.

கிழக்குச் சம்பவங்களால் தமது தொழிலும் பறிபோகக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது எனவும் இக் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

இதேசமயம் கடந்த 5மாதங்களாக எவ்வித வருமானமும் இன்றித்தமது அன்றாட சீவியத்துக்கு தாம் மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (70)

### எருக்கலம்பிட்டி..

யானார். அந்தோனிப்பிள்ளை சிவராஜா (விடத்தல்தீவு) என்பவர் காயமடைந்தார். வீடு ஒன்றும் சேதமானது.

மன்னார் மோதல்களில் இரு போராளிகள் வீரமரணமடைந்ததாக முன்னர் வந்த செய்தி தவறானது எனப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

### மொனராகலைக்...

ளேயே சக்திவாய்ந்த ரேடியோட்ரான்ஸ் மிட்டர்கள் ராணுவத்தினரும் பொலிஸாரும் பாவிக்கும் தொலைத் தொடர்பு சாதனங்கள், ரிசீவர்கள் என்பனகண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ஜே. வி பியினரால் ராணுவ முகாம்களில் இருந்தும் பொலிஸ் நிலையங்களில் இருந்தும் கைப்பற்றிய சாதனங்களே இவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 05-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# உலக அரங்கில்

## தேசியஅரசு அமைய சாத்தியமில்லை

நேற்று பரபரப்பான சூழ்நிலையில் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய முன்னணியின் எம். பிக்கள் குழுக் கூட்டத்தில் தேசிய அரசு ஒன்று அமைக்க சாத்தியமேதுமில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்திரா காங்கிரஸுடனோ, பாரதீய ஜனதாக் கட்சியுடனோ கூட்டுச் சேர்வதில்லை என்றும் மற்றோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இம் முன்னணியின் 210 உறுப்பினர்களில் சுமார் 140 பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முன்னணியின் மற்றுமிரு முக்கிய தலைவர்களான தேவிலாலும், சந்திரசேகரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை தாம் பிரதமர் பதவிக்கு வரத் தயாராக இருப்பதாகச் சந்திரசேகர் அறிவித்துள்ளார். பிரதமர் வி. பி. சிங்கைப் பதவி விலகுமாறு தேவிலால் கேட்டுள்ளார்.

பிந்திய செய்திகளின்படி, வி. பி சிங்கின் அமைச்சரவையில் உள்ள இரு அமைச்சர்கள் நம்பிக்கைத்தீர்மான வாக்கெடுப்பின்போது இந்திரா காங்கிரஸுக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளனர் என திருகாட்கில் குறிப்பிட்டுள்ளார். எனினும் இருவரையும் தாம் அடையாளம் காட்டமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதே சமயம் பீகாரில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

## நாடாளுமன்றத்தில் இருந்து பெனாஸிர் வெளிநடப்பு

பாக்கிஸ்தானில் தேசியப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக திருமதி பெனாஸிர் பூட்டோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் நேற்றுப் பாராளுமன்றத்தில் இருந்து திடீரென வெளிநடப்புச் செய்துள்ளார். தனது கணவரை கராச்சி சிறையில் இருந்து விடுவித்து பதவிப் பிரமாணம் செய்ய அனுமதிக்கவில்லை எனக் கூறியே அவர் வெளிநடப்புச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை சிந்து மாகாண சட்டப் பேரவையில் இருந்தும் பெனாஸிர் பூட்டோவின் கட்சி உறுப்பினர்கள் தமது உறுப்பினர்கள் சிலர் தடுப்புக்காவலில் உள்ளதை ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்தனர்.

## சவுதிஅரேபிய தளத்திற்கு பேக்கர் திடீர் விஜயம்

அமெரிக்க உள்விவகார செயலர் ஜேம்ஸ் பேக்கர் நேற்று சவுதிஅரேபியாவுக்கு திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டார். சவுதியில் அமைந்துள்ள அமெரிக்க கூட்டுப் படைகளின் தலைமைப் பீடத்தில் இவர் பல உயரதிகாரிகளுடன் பேச்சுகளை நடாத்தினார், இக்கூட்டுப்படைத் தலைமையகமே ஈராக்கிற்கு எதிரான ராணுவ நடவடிக்கைகள் குறித்துத் தீர்மானிக்கும் கட்டுப்பாட்டு மையமாகும், பேக்கரின் இத்திடீர் விஜயம் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கத் தலைமையிலான சர்வதேசப் படைகள் ராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பது குறித்து அமைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## காஸாவில் தொடர்ந்தும் கலகம்

இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்க்கும் இடையில் நேற்று இரண்டாவது நாளாகவும் காஸாப்பகுதியில் மோதல்கள் இடம் பெற்றன. பலஸ்தீனியர்கள் இஸ்ரேலியப் படையினரை நோக்கிக் கற்களை வீசியதுடன் பெற்றோல் குண்டு வீச்சிலும் ஈடுபட்டனர். இவர்களை நோக்கிப் படையினர் ரப்பர் குண்டு, துப்பாக்கிச் சூடுகளை நடாத்தியதில் நூற்றுக்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் காயமடைந்தனர்.

## இரத்த வங்கியில் இரத்தம் இல்லை பொதுமக்களின் உதவி அவசியம்

மானிப்பாயில் இயங்கும்யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கிப் பிரிவில் எந்த வகையைச் சேர்ந்த இரத்தமும்தற்போது இல்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் இரத்தம்தேவைப்படும் கடும் நோயாளிகள் உயிரிழக்க வேண்டி ஏற்படும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இக்கட்டான தற்போதைய நிலைமையில் மனிதாபிமானத்துடன் இரத்ததானம் முன்வந்து செய்யுமாறும் அறிவிக்கப்படுகிறது.

பொது ஸ்தாபனங்கள் குழுவாக இரத்ததானம் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு வாகன உதவி செய்யப்படும் என மானிப்பாய் செஞ்சிலுவைச்சங்கப் பிரிவு அறிவித்துள்ளது. (ப-11)

## பாம்பு கடித்து மூவர் மானிப்பாயில் சிகிச்சை

தற்போது பெய்யும் பருவ மழையினாலும்இரவு மின்சார வெளிச்சங்கள் இல்லாததாலும் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் பொதுமக்களும் இவற்றால் தீண்டப்படுகின்றனர்.

மூளாயில் இ. நாகராசா (41) என்பவரும் வட்டுக்கோட்டையில் சின்னையா அழகரட்ணம் (58) என்பவரும், இணுவில் சந்திரபோஸ் (16) எனபவரும் பாம்பு கடித்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ப 11)